# தமிழரின் வாணிகமும் போக்குவரத்து சாதனங்களும்

21

**முனைவர் க.மைதிலி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார்பல்கலைக்கழகம், சேலம் - 636 011
E- mail:mythili.dhanapal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வணிகர் சிறந்த காரணமாவர். நாட்டின் ஓரிடத்தில் உண்டாகும் விளை பொருள்களை அவை அருகிக் கிடக்கும் பிற இடங்களுக்கு அனுப்புவதும் கொண்டு சென்று விற்பதும் அவற்றைத் தத்தம் ஊர்களில் விற்றலும் வணிகத்தொழில் ஆகும். இத்தொழில் முறையால் நாட்டில் செல்வ வளம் கொழிக்கும் ஆகையினாலே சமுதாயத்தில் வணிகர் சிறப்பிடம் பெற்றனர். எனவே திருவள்ளுவர் வணிகரைத் "தாழ்விலாச் செல்வர்" என்று கூறினார். கரிமீதும் பரிமீதும் ஏறிச்செல்லும் உரிமை பெற்றிருந்தனர். இங்ஙனம் வாணிகம் பண்டைய காலத்தில் மேன்மைவுற்று இருந்ததற்குப் பழந்தமிழர் சிறந்த தொழில்நுட்ப அறிவுத்திறம் பெற்றவராக திகழ்ந்தனர். இரும்பு தொழில் நுட்பம், மரக்கலம் கட்டுமானம், பலவகை அணிகலன்களை உருவாக்குதல், ஆடை நெய்தல் ஆகிய பலவகை தொழில்களில் திறமை மிக்கவராகயிருந்தமையை அறிய முடிகிறது.

**திறவுச் சொல்**

கிரேக்கர், ரோமானியர் - யவனர், ஐவனநெல்- மலைநெல், மேலைநாடு - ரோம், எகிப்து, பாரசீகம், கீழை நாடு - சீனா, மலேசியா, சாவகம், நூலாக்கலிங்கம் - பட்டுத்துணி, சோப்பட்டினம் - எயிற் பட்டினம், கண்டகோபாலபட்டினம், கொல்லம்.

**முன்னுரை**

பழந்தமிழர்களின் பெரும் பொருளாதாரமும் துறைமுகங்களின் வாணிகங்கள் வழியே வளர்ந்தும் உள்ளது. இலக்கிய அகழ்வாராய்ச்சி வரலாற்று ஆவணங்கள் வழியே தமிழகம் - ரோமாபுரி, தமிழகம் - கிரேக்கம் என நாடுகளுக்கு இடையேயான வாணிகத்திற்கான சான்றுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. தமிழகத்தின் உணவுப்பொருட்கள் ஆபரணங்கள் ஆகியவற்றிற்கு மேலை நாடுகளில் பெரும் ஈர்ப்பு இருந்துள்ளதைச் சுட்ரோபோ, ஃபிளனி, மெகஸ்தினஸ் ஆகியோர் உறுதி செய்துள்ளனர். ரோமபுரி மற்றும் அரேபிய கடலோடிகள் இந்தியப் பெருங்கடலின் பருவக் காலம், காற்றோட்டம், கடல்வழி பயணங்கள் குறித்த தெளிவினைத் தமிழர்களிடம் இருந்து பெற்றுள்ளதாக சில வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றன. பழங்காலத்தில் இடம், பொருள், சூழ்நிலைகளுக்குத் தக்கபடி தரைவாணிகளும் கடல்வாணிகமும் சிறப்புற நடந்தன. அவர்கள் கூட்டாகச் சேர்ந்து சாத்து அமைத்துப் பெரிய வாணிகத்தை நடத்தினார்கள் சங்ககாலத் தமிழர்கள் வாணிதத்தில் மிகுந்த ஆர்வம் உடையவராகத் திகழ்ந்தனர். சங்க அரச மரபினரும் வணிகர்களுக்கு

ஊக்கம் அளித்து வளர்த்தனர். அவர்கள் தங்களுடைய நாடுகளில் வணிகக் கப்பல்கள் வந்து போகவும் ஏற்றுமதி இறக்குமதி செய்யவும் துறைமுகப்பட்டினங்களை அமைத்தார்கள். மேலும் துறைமுகத்தைக் காட்ட கலங்கரை விளக்குகளை அமைத்தார்கள். துறைமுகங்களில் உள்ள வாணிகப்பொருட்கள் களவு போகாதபடி காவல் காத்தனர். தரை வாணிகமும் கடல் வாணிகத்தின் வளர்ச்சியும் பழந்

தமிழரின் வாழ்வியல் நிலையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. மேலும் அவற்றைச் சார்ந்து பயிர்த்தொழில் வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் பெருகி பொருள் உற்பத்திச் செழித்தோங்கின. பொருள்களின் உற்பத்தியினாலும் வாணிகத்தினாலும் பொருளாதாரம் உயர்ந்து நாடு செழித்து மக்கள் சிறப்பான வாழ்வு வாழ்ந்தார்கள். பண்டைத் தமிழர்களின் நாகரிக வாழ்க்கைக்கு வாணிகம் முக்கியக் காரணமாக அமைந்ததை அதன் தொழில்நுட்ப வளர்ச்சியை இலக்கிய சான்றுடன் தொல்லியல் சான்றுகளையும் நோக்குதலே இக்கட்டுரையில் முதன்மை நோக்கமாகும்.

**பழந்தமிழரின் வாழ்வியல் முறை**

மனித வாழ்க்கை முறையானது வாழ்ந்த இடங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற மாதிரி வெவ்வேறு விதமாக அமைந்திருந்தன. நிலத்தினுடைய இயற்கை அமைப்புக்குத் தக்கபடி அக்காலத்து மக்கள் வாழ்க்கை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் நிலப்பிரிவுபடி சங்ககால மக்களின் வாழ்க்கை அமையப் பெற்றிருந்தன. மலைகளிலும் மலைச்சாரல்களிலும் ஐவன நெல்லையும் திணை எனும் அரிசியையும் பயிர் செய்தார்கள். மலை உச்சியில் உள்ள பாறைகளில் மலைத்தேன் கிடைத்தது. வள்ளிக்கிழங்கு பயிர் ஆயிற்று. யானைகளையும் காட்டுப் பன்றிகளையும் மான்களையும் வேட்டை ஆடினார்கள். வேட்டையாடிக் கொண்டு வந்த மான் இறைச்சியை உழவர் இடத்துக் கொடுத்து நெல்லை மாற்றிக் கொண்டதை கோவூர் கிழார் கூறுகிறார். யானையின் தந்தங்களை மதுபானக் கடையில் கொண்டு போய்க் கொடுத்து மதுபானம் அருந்தியதை,

**வரிமாண் நோன்ஞாண் வன்சிலை கொள்ள**
**அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்**
**அண்ணல் யானை வெண்கோடு கொண்டு**
**நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும் (அகநா. 61:8-10)**

என்று மாமூலனார் பாடல் வழி அறியலாம். மலைகளின் அடிவாரத்தில் உள்ள முல்லை நிலத்தில் வாழ்பவர் வரகு கேழ்வரகு, அவரை, துவரை போன்றவற்றைப் பயிரிட்டனர். ஆடு மாடுகளை மேய்த்தனர் பால், தயிர் மோர், நெய் இவைகளை மாற்றித் தானியத்தைப் பெற்று உணவு சமைத்தனர் இதனை உருத்திரங்கண்ணனார்,

**அம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்**
**உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சமட்டு இரீஇ**
**நாள்மோர் மாறும் நன்மா மேனிச்**
**சிறுகுழை துயில்வரும்காதிற் பணைத்தோள்**
**குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்**

**அளவிலை உணவில் கிளையுடன் அருந்தி (பெரும்பாண், 155-163)**

என்ற வரிகள்மூலம் உணரலாம் .

நிலவளமும்நீர்வளமும் உள்ள மருதநிலத்தில் நெல்லை விளைவித்தார்கள் கரும்பை பயிர்ட்டார்கள். தமிழக மக்களின் நாகரிகமும் பண்பாடும் வளம்பெற்று வளர்ந்தது ஆற்றங்கரைகளிலும் ஏரிக்கரைகளிலுமே ஆகும். பாணர் உள்நாட்டு நீர்நிலைகளில் வலை வீசியும் தூண்டில் இட்டும் மீன் பிடித்தார்கள். அதை பாண்மகளிர் ஊரில் கொண்டு போய்ப் பயற்றுக்கும் தானியத்துக்கும் மாற்றினார்கள் என்பதை ஓரம்போகியார்,

**முள்ளயிற்று பாண்மகள் இன்கெடிறு சொரிந்த**

**அகன்பெரு வட்டி நிறைய மனையோள்**

**அரிகால் பெரும்பயிறு நிறைக்கும் (ஐங்குறு.புலவிப்பத்து, 47)**

என்ற வரிகளில் கூறுவதைக் காணலாம்.

கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நிலமக்கள் உப்பு விளைவித்தார்கள். உப்பு வணிகர்கள் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள் என்பதை,

**தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**

**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி (நற்றி:183,1:2)**

என்று கூறுகின்றது.

ஊர்த்தெருக்களில் உப்பு விற்ற உமணப்பெண் உப்பை நெல்லுக்கு மாற்றியதை,

**கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**

**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**

**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**

**சேரிவிலை மாறு கூறலின் (அகநா.40:5-8)**

என்ற அம்மூவனார் கூற்றின் வழி அறியலாம்.

**மேலைநாட்டுடனான வாணிகம்**

பழங்காலத்தில் தமிழகத்தோடு யவனர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். கிரேக்கர், ரோமானியர், எகிப்தியர், பாரசீகர், அராபியர் ஆகிய அனைவரையும் யவனர் என அழைக்கும் வழக்கம் இருந்தாலும் பெரும்பாலும் ரோமானியரே மிகுதியாகத் தமிழகம் வந்தனர்.

மேற்கு கடற்கரைக்கு மிளகு, சந்தனம், தந்தம், ஏலம், அகில், தேக்கு, இலவங்கம், சிலவிலங்குகள், பறவைகள், சங்கு, முத்து, பவளம் ஆகிய பல பொருள்களுக்காக வந்த ரோமானியர் பாலக்காடு, போளுவாம்பட்டிக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டுக்கு வந்தனர். பல வண்ணக்கல் மணிகளை வாங்கியதோடு, கிழக்குக்கரை முத்துக்களையும் பெற்றனர். ரோம் நாட்டினரின் ரௌலாடட் அரிட்டைன் என்ற உயர்வகைப் பானை ஓடுகள் அம்போரா என்னும் கூர்முனை மதுக்குடங்கள், ரோமானிய சுடுமண் பொம்மைகள், ரோம அரசரின் பொன், வெள்ளி, செம்பு நாணயங்கள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. யவனக் கப்பல் வணிகம் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் நடந்தது. கி.மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரோம்

சாம்ராச்சியத்தை அரசாண்ட அகஸ்தஸ் சீசர் அரசன், யவன – தமிழர் வணிகத்தை விரிவுப்படுத்தினான். ரோமபுரி அரசர்களின் உருவமுத்திரை பொறித்தப் பழைய நாணயப் புதையல்கள் தமிழகத்தின் சில பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

“கொங்கு நாட்டில் பல ஊர்களில் ஆயிரக்கணக்கில் உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. அதனால் அந்த ஊர்களில் ரோமானியர்கள் வந்து தங்கி வாணிகம் செய்துள்ளனர் எனலாம். காசுப்பொருளியல், நகர வாழ்க்கையோடு தொடர்புடையது. சங்ககாலத்தில் ஊரகப் பகுதியில் பண்டமாற்றே நிலைப் பெற்றிருந்தது, அதனால், காசுகள் கிடைக்குமிடங்கள் ….ரோமானியர் தங்குமிடங்களாக விளங்கியிருக்க வேண்டும் சில ஊர்களில் முத்திரைக் காசுகளும் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அதனால், வடநாட்டு வாணிகர்களும், தமிழக நகரங்களுக்கு வந்து சென்றனர் எனலாம். தமிழகம் முழுவதும் 1000 ரோமானியக் காசுகள் கண்டறியப் பெற்றுள்ளன. கொங்கு நாடு … சங்ககாலத்திலேயே நகரங்களையும் நெகமங்களையும் பெற்றிருந்த பகுதியாக விளங்கியது”(பக்-57, பண்டைத்தமிழ்ச் சமூகம்) எனக் கோ.சசிகலா, ர.பூங்குன்றன் கூறும் கருத்துக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ரோமானியர்கள் நிலையாகத் தங்கியிருந்தனர். அவர்களின் வணிகம் வளர்ச்சியுற்றிருந்த போதுதான் பாண்டிசேரி அருகே பண்டக சாலையும் விற்பனை சாலையும் ஏற்பட்டன. அங்கே சாயத் தொட்டிகள், காசுகள், மட்பாண்ட ஓடுகள், கண்ணாடி, மதுச்சாடி ஆகியவை கிடைத்துள்ளன.

மேலும் சேரரின் வணிக நகரமான கொடுமணலைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான மணிக்கற்கள் கிடைக்கின்றன. இதனை “கொடுமணலுக்கு 5 கல் தொலைவில் காங்கேயத்தில் இருந்து திருப்பூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள படியூரில் விளைந்த பச்சைக்கல் (Berly) ரோம நாட்டினரால் பெரிதும் விரும்பப்பட்டது என்பதைத் தாலமி கூற்றின் மூலம் உணரலாம்… கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணினி தமது அஷ்டாத்தியாயத்தில் இந்த அரிய மணிக்கல் விதுரா நாட்டிரிருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார். அதனால் இக்கல் வைடூரியம் அல்லது விதுரத்ஷா என்று அழைக்கப்பட்டது. பாணினிக்குப் பின்னர் வந்த பதஞ்சலி தமது பாஷ்யத்தில் (உரையில்) விதுரா என்பது மணிகள் செய்யும் இடத்தைக் குறிப்பதாகவும், அரிய மணிக்கற்கள் வலவய (Valavaya) என்ற மலையிலிருந்து கிடைப்பதாகவும் கூறுகிறார். இவ்வகைக் கற்கள் இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமே அதுவும் குறிப்பாகத் திருப்பூருக்கும் கரூருக்கும் இடையில் அமைந்துள்ள கொடுமணல், படியூர், காங்கயம் ஆகியவற்றின் சுற்றுப் பகுதிகளில் மட்டுமே கிடைப்பதால் பாணினி, பதஞ்சலியின் குறிப்புகள் இப்பகுதியைச் சுட்டுவதாகவே பிஸ்வாஸ் அவர்கள் எண்ணுகிறார்.” (பக்.82-83) எனக் கா.ராஜன் (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்) கூறும் கருத்துக் குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் ரோமுடன் பல ஆண்டுகளாகத் தமிழர்கள் வாணிகம் மேற்கொண்டு வந்திருந்திருந்தனர்.

கீழைநாடுகளான சீனர், மலேசியா, சாவகம், வடபோர்னியா போன்ற பல நாடுகளுடன் பன்னெடுங்காலமாகத் தமிழர் வணிகம் மேற்கொணடிருந்தனர். கி.மு. ஏழாம் நூற்றாண்டு முதல் தமிழகப் பொருள்கள் சீனத்தில் விற்கப்பட்டன. “தமிழகத்துக் கப்பல் வணிகர் சாவக நாட்டுக்குக் கடல் கடந்து போய் அங்கு உண்டான வாசப் பொருள்களையும் பவளத்தையும் சீனத்திலிருந்து அங்குக் கொண்டு வரப்பட்ட பட்டுத்துகிலையும் கொண்டு வந்து பழந்தமிழ் நாட்டில் விற்றார்கள்” (ப.45; தமிழர் நாகரிகமும் பண்பாடும், தட்சணாமூர்த்தி). தொன்மை காலத்தில் சீனர் தமிழகத்திற்கு வரவில்லை,

அவர்களின் வணிகம் சாவகத்தீவுடன் நடைபெற்றது. அப்பகுதியில் கொண்டு வந்த பட்டுக்களை, அங்குச் சென்ற தமிழக வாணிகர் வாங்கிக்கொண்டு வந்து இங்கு விற்றார்கள். தமிழர் பட்டுத்துணியை "நூலாக்கலிங்கம் வால்அரைக் கொளீஇ", (பதிற்.12:27) என்று கூறுவதன் மூலம் நூலாக்ககலிங்கம் என்பது பட்டுத்துணியைக் குறிக்கும் சொல்லாகப் பழங்காலத்தில் வழக்கில் இருந்தமையை அறியலாம்.

**கரையோர வாணிகம்**

தென்னிந்தியாவுக்கும் வடநாட்டுக்கும் கி.மு.மூன்றாம் நூறறாண்டிலேயே மிகப்பெரிய அளவிற்கு வணிகம் நடைபெற்றது. மெகஸ்தனீசு பாண்டிய நாட்டு முத்துக்களைப் பாராட்டுகின்றார். கௌடில்லியரின் அர்த்த சாத்திரம் தாமிரபருணி, பாண்டிய கவாடம் ஆகிய இடங்களின் முத்துக்களையும், மதுரையில் நெய்த பருத்தி ஆடைகளையும் பற்றிப் பேசியுள்ளது.

சங்ககாலத்தில் ஆந்திரம், கலிங்கம் வழியாக வடநாடு செல்லும் பாதையும் இருந்துள்ளது இதனை மாமூலனார்,

**கழல்புனை திருந்துஅடிக் கள்வர் கோமான்**
**மழபுலம் வணங்கிய மாவண் புல்லி**
**விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும் (அகநா.61)**

என்ற பாடல் வரிகளில் இடம்பெறும் வேங்கடம் மலை என்கிற திருப்பதியைக் கடந்து மொழிபெயர் தேயம் வழியாகத் தமிழர்கள் சென்றது குறிப்பிடத்தக்கது. தமிழகத் துறைமுகப்பட்டினங்களான கொற்கை, தொண்டி, பூம்புகார், சோபட்டினம் முதலான துறைமுகப்பட்டினங்களிலிருந்து நாவாய்களில் சென்ற தமிழ் வணிகர்கள் கிழக்குக் கடற்கரை பட்டினங்களான நெல்லூர், கலிங்கப்பட்டினம், தம்ரலிப்தி முதலான பகுதிகளுக்குச் சென்றனர். பிறகு கங்கையாற்றில் நுழைந்து கங்கைக் கரையிலிருந்த பாடலிபுரம், காசி முதலான ஊர்களில் வாணிகம் செய்தனர். இதனை பட்டினப்பாலை "கங்கைவாரியும் காவிரிப்பயனும்" (பட்டின:190) என்ற வரியில் கங்கைப் பகுதியில் விளைந்த பொருட்கள் தமிழகம் வந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**துறைமுகப்பட்டினங்கள்**

பெரும்பாலும் துறைமுகப்பட்டினங்கள் ஆறுகள் கடலில் சேர்கின்ற புகர்முகங்களில் இருந்தன. ஆற்று முகத்துவாரங்கள் இல்லாத துறைமுகப்பட்டினங்கள் சில இருந்தன. ஒவ்வொரு பெரிய துறைமுகங்களிலும் கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் கிழக்குக்கரைத் துறைமுகங்கள் கொல்லத்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை என்பவை ஆகும். தமிழகத்துக்கு அருகில் உள்ள இலங்கைத்தீவுடன் அக்காலத்தில் தமிழர் வணிகம் செய்தனர் அங்கிருந்த முக்கியத் துறைமுகப்பட்டினங்களான மணி பல்லவம், திருக்கே தீச்சரம் என்பவை ஆகும்.

கொல்லத்துறை என்ற துறைமுகப்பட்டினம் வடபெண்ணையாற்றின் தென்கரையில் ஆறு கடலில் கலக்கிற முகத்துவாரத்தில் இருந்தது. இது பழங்காலத்தில் தொண்டை நாட்டுத் துறைமுகப்பட்டினமாக இருந்தது. கொல்லத்துறை, நெல்லூர், பெண்ணையாறு என்ற பெயர்களே தமிழ்ப் பெயர்களாக இருந்தன. "கொல்லத்துறை பழந்தமிழ்நாட்டின் வடகோடியில் கிழக்குக்கரையில்

இருந்தது. கொல்லத்துறை என்னும் பெயர் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் கண்ட கோபாலபட்டினம் என்று பெயர் மாற்றபட்டது. ஆனாலும் அதன் பழைய பெயர் மறைந்துவிடவில்லை. கொல்லத்துறையான கண்டகோபாலபட்டினம் என்று அது கல்வெட்டுச் சாசனங்களில் கூறப்படுகின்றது." (ப.73 பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை சீனி. வேங்கடசாமி) இங்ஙனம் கொல்லத்துறை கடைச்சங்க காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது.

சங்ககாலத்தில் தொண்டை நாட்டில் முக்கியத் துறைமுகப்பட்டினமாக இருந்தது எயிற்பட்டினம். இந்தத் துறைமுகத்தை சூழ்ந்து மதில் இருந்தமையால் இப்பெயர் பெற்றது. இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில்,

**மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய**
**பனிநீர்ப் படுவிற் பட்டினம் (சிறுபா:152-153)**

என்று எயிற்பட்டினம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**ஓங்கு நிலை யொட்டகம் துயில் மடிந்தன்ன**
**வீங்குதிரை கொணர்ந்த விரை மாவிறகு (சிறுபா:154-155)**

என்று வரிகள் மூலம் அகிற்கட்டை இங்கு இறக்குமதியான பொருள்களில் ஒன்றாகும். இது சாவக நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டதாக அறியமுடிகின்றது.

**வாளைலுப் புரவியொடு வடவளம் தரூஉம்**
**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படைப்பபை**
**மாடமோங்கிய மணல் மலி மறுகில்**
**பரதர் மலிந்த பல்வேறு தெருவில் (பெரும்பாண்:320-323)**

என்ற வரிகளில் இத்துறை முகப்பட்டினத்தில் நாவாய்களில் வந்து இறங்கியப் பொருட்களில் குதிரைகளும் வட இந்தியப் பொருட்களும் இருந்தன. இத்துறைமுகப்பட்டினத்தில் கலங்கரை விளக்கு இருந்ததை கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில்,

**வானம் ஊன்றிய மதலை போல**
**ஏணி சாத்தியை வேற்றருஞ் சென்னி**
**விண்பொர நிவந்த வேயா மாடத்து**
**இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்துறை(பெரும்பாண்:346-350)**

என்பதில் கலங்கரை விளக்கு நிலையம் உயரமான கட்டடமாக இருந்தது. அது சாந்து பூசப்பட்டு தள வரிசையுள்ளதாக இருந்தது. அதன் உச்சியில் இரவுப்பொழுதில் தீயிட்டு எரித்தார்கள். உச்சியில் ஏறி விளக்கு ஏற்றுவதற்கு ஏணிப்படிகள் இருந்தன. அதேபோல் காவிரிபூம்பட்டினத்திலும் துறைமுகத்தில் கலங்கரை விளக்கு நிலையம் கட்டப்பட்டிருந்ததை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

**இலங்குநீர் வரைப்பில் கலங்கரை விளக்கம் (கடலாடுகாதை:141)**

எனக் கூறுகிறார்.

காவிரியாற்றின் முகத்துவாரம் ஆழமாகவும், அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாக இருந்தது. வணிகக் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரத்தைக் கழிக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தையடைந்தன. இதனை

**கூம்பொடு**

**மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது**

**புகாஅர்ப் புகுந்த பெருங்கலம், தகாஅர்,**

**இடைப்புலப் பெருவழிச் சொரியுங்**

**கடற்பல தாரத்த நாடுகிழ வோயே (புறநா.30:10-14)**

என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

பெரிய மரக்கலங்களிலே கொண்டு வந்த பொருள்கள் சிறிய தோணிகளில் ஏற்றப்பட்டுக் கரைக்குக் கொணரப்பட்டன.

**கலந் தந்த பொற் பரிசம்**

**கழித் தோணியால் கரை சேர்க்குந்து (புறநா.343:5-6)**

இங்ஙனம் அவர்கள் பயன்படுத்திய இன்னொரு படகு அம்பி எனப்பட்டது. பரதவர்கள் கயிற்றால் பின்னிய வலைகளுடன் மீன் பிடிக்கச் சென்றதை,

**வடிக்கதிர் திரித்த வன்ஞாட் பெருவலை**

**இடிக்குரற் புணரிப் பௌவத்து இடுமார்**

**நிறைப் பெய்த அம்பி காழோர்**

**சிறையரும் களிற்றிற் பரதவ ரொய்யும் (நற்.74:1-4)**

என்ற வரிகள் மூலம் அறியலாம். புணை அல்லது கட்டுமரம் என்பது மரத்துண்டுகளைக் கொண்டு கட்டப்பட்டது ஆகும். திமில் வகை மரக்கலம் மீன் பிடிக்கவும், முத்துக்குளிக்கவும் பயன்படுத்தியதை நற்றிணையில்,

**வெந்திறல் இளையவர் வேட்டு எழுந்தாங்கு**

**திமில் மேற்கொண்டு, திரைச் சுரம் நீந்தி**

**வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி,**

**நிணம் பெய் தோணியர் இருமணல் இழிதரும் (நற்:111:5-8)**

என்ற பாடலில் அறியலாம்.

இதன் அளவின் காரணமாகவும், செய்யப்பட்ட பாங்கின் காரணமாகவும் இது கொடுந்திமில், திண்திமில் என்று அழைக்கப்பட்டது. இதைச் செலுத்துவதற்குச் சிறப்பு வாய்ந்த திமிலர்கள் பணிபுரிந்துள்ளனர்.

**முடிவுரை**

பழந்தமிழர்கள் இரும்பு மற்றும் எஃகு செய்தல், முத்துக்குளித்தல், அரிய கற்களைக் கொண்டு பல வகையான மணிகள் செய்தல் ஏலக்காய், மற்றும் மிளகு போன்ற வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களின் வள மேம்பாட்டின் காரணமாகவே பழந்தமிழரின் பொருளாதாரம் மேம்பட்டு விளங்கியது. இயந்திரங்களைக் கொண்டு மரக்கலங்களைச் செலுத்தும்

முறை தொழிற்புரட்சிக்குப் பின்பு ஏற்பட்ட மாற்றமாகும். அதற்கு முன்பு பருவக்காற்று, நீரோட்டம், மனித சக்தி கொண்டே மரக்கலங்கள் பெரிதும் செலுத்தப்பட்டன. இயற்கையின் சக்தியான பருவக்காற்றும், கடல் நீரோட்டமும் இதில் முக்கியப் பங்கு ஆற்றின. இதன்மூலம் தமிழகம் கீழை, மேலை நாடுகளுடன் தொடர்ச்சியான வணிக உறவுகளைக் கொண்டிருந்ததை, இலக்கியங்கள், தொல்லியல் சான்றுகள் நிரூபிக்கின்றன. தமிழகத்து வணிகர்கள் மேலை நாடுகளுடனும், கீழை நாடுகளுடனும், இலங்கையுடனும் மேற்கொண்டிருந்த வணிக உறவு என்பது, பண்டைய தமிழரின் கப்பல் கட்டும் திறன், கடல் நீரோட்டம் பற்றிய அறிவு, பருவக்காற்று என்றும் இயற்கைச் சக்தியைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல், இறக்குமதி நாட்டின் எதிர்ப்பார்ப்புக்குத் தக்கவாறு பொருட்களின் தரத்தினை உயர்த்திக் கொள்ளப்பேணும் தொழில் நுட்பத்திறன், தனித்து இயங்காமல் வணிகக்குழுவாக இயங்குகின்ற தன்மை இவை தவிர தமிழகத்தில் பல்வேறு தொழில்நுட்பங்கள் அக்காலக்கட்டத்தில் வளர்ச்சியுற்று இருந்தமையும் பெரும்பங்காற்றின.

**துணை நூற்பட்டியல்**

1. க. ராஜன், தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.
2. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600 098.
3. கோ. சசிகலா, ர.பூங்குன்றன், பண்டைத் தமிழ்ச் சமூகம், தடாகம், சென்னை- 41.
4. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ்வெளியீடு
5. ச.வே. சுப்பிரமணியன் (உ.ஆ), சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி – 1, 2, 3, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600 108
6. இரா.மோகன் (உ.ஆ), பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600 098.
7. ந.மு.வேங்கடசாமி நாட்டார்,(உ.ஆ) சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.